JMC, Thiruvadanai-CC No.198/2025
Judgment Dated: 03.06.2026

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவாடானை.**

முன்னிலை : திரு.J.அன்டோனி ரிஷன்தேவ், B.B.A., L.L.B(Hons),
நீதித்துறை நடுவர்,
திருவாடானை

2026 ம் ஆண்டு ஜீன் திங்கள் 03 ம் நாள் புதன்கிழமை

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண். 198/2025**

CNR No. TNRM-17001394-2025

| | | | |
|---|---|---|---|
| 1. | வரிசை எண். | : | C.C.No.198/2025 |
| 2. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | : | தொண்டி காவல் நிலையம் குற்ற எண்.102/2025 |
| **எதிரியின் விபரம்** | | | |
| 3. | பெயர் | : | சதாம் உசேன் |
| 4. | த/பெ. | : | ஹஜ் மஸ்தான் |
| 5. | தொழில் | : | கூலி |
| 6. | முகவரி | : | 9/40, ஹை ஸ்கூல் தெரு,<br>அனிஸ் நகர்,<br>தொண்டி,<br>திருவாடானை தாலுகா,<br>இராமநாதபுரம் மாவட்டம். |
| 7. | வயது | : | வயது 27/2025 |
| 8. | சம்பவ நாள் | : | 08.05.2025 ம் தேதி 10.15 மணி |
| 9. | புகார் தேதி | : | 08.05.2025 ம் தேதி 13.00 மணி |
| 10. | எதிரி கைது செய்யப்பட்ட நாள் | : | 08.05.2025 |
| 11. | எதிரி பிணையில் விடுவிக்கப்பட்ட நாள் | : | 08.05.2025 தேதி எதிரி காவல் நிலைய பிணையில் சென்றுவிட்டார். |
| 12. | கமிட்டல் உத்தரவு | : | இல்லை |
| 13. | விசாரணை துவங்கப்பட்ட நாள் | : | 13.10.2025 |
| 14. | விசாரணை முடிவுற்ற நாள் | : | 26.05.2026 |
| 15. | சாட்டப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது 296(b),118(1), 351(3) BNS ன் கீழ் |
| | வனையப்பட்ட குற்றச்சாட்டு | : | எதிரி மீது 296(b), 118(1), 351(3)(3 counts) BNS கீழ் |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 10:11:43 +0530

JMC, Thiruvadanai-CC No.198/2025
Judgment Dated: 03.06.2026

| | | | |
|---|---|---|---|
| 16. | காலதாமதத்திற்கான காரணம் | : | –இல்லை– |
| 17. | அரசு தரப்பு சாட்சிகள் | : | அ.சா.1 – முதல் விசாரணை – 14.05.2026<br>குறுக்கு விசாரணை – 14.05.2026<br>அ.சா.2 – முதல் விசாரணை – 14.05.2026<br>குறுக்கு விசாரணை – 14.05.2026<br>அ.சா.3 – முதல் விசாரணை – 14.05.2026<br>குறுக்கு விசாரணை – 14.05.2026<br>அ.சா.4 – முதல் விசாரணை – 22.05.2026<br>குறுக்கு விசாரணை – 22.05.2026 |
| 18. | எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS–ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | : | 26.05.2026 |
| 19. | எதிரி தரப்பு சாட்சிகள் | : | இல்லை |
| 20. | எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 348 BNSS பிரிவின் படியான மனுக்கள் | : | இல்லை |
| 21. | அரசு தரப்பு வழக்கறிஞர் | : | செல்வி.முத்துமாரி |
| 22. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | : | திரு.M.வினோத்குமார் |
| 23. | எதிரியின் கூற்று | : | எதிரி குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார் |
| 24. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | : | 03.06.2026 |
| 25. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | : | 03.06.2026 |
| 26. | நீதிபதியின் முடிவு | : | முடிவாக, எதிரி 296(b), 118(1), 351(3)(3 counts) BNS–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரியை பிரிவு 271(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.<br><br>இவ்வழக்கில் வழக்கு சொத்தான P.R.No.132/2025 ல் கட்டுப்பட்டுள்ளதும், அ.சா.பொ.1 ஆக குறியீடு |

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 10:11:54 +0530

| | | | |
|---|---|---|---|
| | | | செய்யப்பட்டுள்ளதுமான 26 செ.மீ நீளத்தில் ஒரு பக்கம் கூர்மையும் 14 செ.மீ மரக்கைப்பிடியும் அதில் 2 செ.மீ இரும்பு பூனுடன் மொத்தம் சுமார் 40 செ.மீ நீளமுள்ள இரும்பு கத்தி ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய வழிமுறைகளை பின்பற்றி அழித்தல் செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு 05.08.2025 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, இந்நீதிமன்றத்தின் முன்பு 26.05.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்த போது, அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.வினோத்குமார் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

1. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் சுருக்கம்:–

கடந்த 30.06.2024 ம் தேத நம்புதாளையை சேர்ந்த மிருஷான் அலிகான் என்பவரால் முகமது அபுபக்கர் என்பவர் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார். இதில் இறந்த நபரான முகமது அபுபக்கர் என்பவர் இவ்வழக்கின் எதிரி தரப்பினருக்கு உறவினராவார். முகமது அபுபக்கரை கொலை செய்த மிருஷான் அலிகான் என்பவர் இவ்வழக்கின் வாதி தரப்பினருக்கும் உறவினராவார். இதனால் இரு தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் இவ்வழக்கின் வாதி சர்மிளா பானுவின் அக்காவின் கணவரான 2 வது சாட்சி ஹபிபுல்லா என்பரிடம் இவ்வழக்கின் எதிரி அடிக்கடி பிரச்சனை செய்து வந்த நிலையில் 07.05.2025 ம் தேதி மதியம் 15.30 மணிபோல 2 வது சாட்சி ஹபிபுல்லா இருசக்கர வாகனத்தில் வரும்போது எதிரி அவர் ஓட்டி வந்த வண்டியால் முட்டுவது போல் வந்து உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிச்சென்றுள்ளார். மேலும் 08.05.2025 ம் தேதி காலை 10.15 மணிக்கு 2 வது சாட்சி அனிஷ்நகரில் உள்ள சிவா என்பவரின் வீட்டில் அருகே நின்று கொண்டிருக்கும் போது அந்த வழியாக வந்த எதிரி ஏண்டா நான் போகும் போதும் வரும் போது

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 10:12:03 +0530

முறைக்கிறாய் அதே போல் நேற்று கொன்றுவிடுவேன் என்று மிரட்டுகிறாய் என்று கேட்கவும் எதிரியானவர் 2 வது சாட்சியைப் பார்த்து ஏண்டா தேவடியா மகனே என்னடா கேட்குற என்று சட்டையை பிடித்து சண்டை போடவும் சாட்சிகள் சிராஜீதீன், காதர்மைதீன், சஹாபுதின் ஆகியோர் சண்டையை விலக்கவும் எதிரியானவர் அவர்களுடன் கட்டி உருண்டு விட்டு சென்று எதிரி வீட்டிலிருந்து கத்தியை எடுத்துக்கொண்டு வந்து 2 வது சாட்சி ஹபிபுல்லா மற்றும் சாட்சி சீராஜீதீன் ஆகியோரை குத்துவதற்கு ஓடிவரவரும் வாதியான சர்மிளா பானுவும் சாட்சி 2 ஹபிபுல்லா தடுத்த போது எதிரியானவர் அவர் கையில் வைத்திருந்த கத்தியால் வாதியின் வலது கையில் மணிக்கட்டுக்கு மேல் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தியும் பின்பு எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து எப்ப இருந்தாலும் உங்களை ஒவ்வொருவராக கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்த குற்றம் புரிந்ததாக எதிரி மீது 296(b), 118(1), 351(3) BNS–ன் கீழ் தொண்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்

2. எதிரி இந்நீதிமன்றத்தில் முன்னிலையானபோது, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் எதிரிக்கு பிரிவு 230 BNSS ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுக்கப்பட்டு இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்ததில், எதிரி முதல் நோக்கில் குற்றத்தினை செய்திருக்கலாம் என அனுமானிக்க போதிய காரணங்கள் இருந்ததால் எதிரி மீது 296(b), 118(1), 351(3)(3counts) BNS–ன் கீழ் குற்றச்சாட்டுகள் வனைந்து, படித்துக்காட்டி, விளக்கிக்கூறி வினவிய போது எதிரி குற்றசாட்டுகளை மறுத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

4. இவ்வழக்கில் சாட்சிகள் விசாரணை துவங்குவதற்கு முன்பு புகார்தாரரும், எதிரியும் சேர்ந்து சமரசமாக சென்றுவிட்டதாக தெரிவித்து பிரிவு 359 BNSS ன் கீழ் மனு

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 10:12:14 +0530

தாக்கல் செய்தனர், அந்த மனுவானது Crl.M.P.No.351/2026 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு மனுவின் நிலைத்தன்மையை கருதி மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டு, சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர்.

5. அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்கள், அ.சா.பொ.1 சான்று பொருள் குறியீடு செய்யப்பட்டு அரசு தரப்பு சாட்சியமும், அரசு தரப்பு வழக்கறிஞரால் முடித்துக்கொள்ளப்பட்டது.

6. <u>அரசு தரப்பு வழக்கு மற்றும் சாட்சிகளின் சுருக்கம் : –</u>

கடந்த 30.06.2024 ம் தேத நம்புதாளையை சேர்ந்த மிருஷான் அலிகான் என்பவரால் முகமது அபுபக்கர் என்பவர் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார். இதில் இறந்த நபரான முகமது அபுபக்கர் என்பவர் இவ்வழக்கின் எதிரி தரப்பினருக்கு உறவினராவார். முகமது அபுபக்கரை கொலை செய்த மிருஷான் அலிகான் என்பவர் இவ்வழக்கின் வாதி தரப்பினருக்கும் உறவினராவார். இதனால் இரு தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் இவ்வழக்கின் வாதி சர்மிளா பானுவின் அக்காவின் கணவரான 2 வது சாட்சி ஹபிபுல்லா என்பரிடம் இவ்வழக்கின் எதிரி அடிக்கடி பிரச்சனை செய்து வந்த நிலையில் 07.05.2025 ம் தேதி மதியம் 15.30 மணிபோல 2 வது சாட்சி ஹபிபுல்லா இருசக்கர வாகனத்தில் வரும்போது எதிரி அவர் ஓட்டி வந்த வண்டியால் முட்டுவது போல் வந்து உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிச்சென்றுள்ளார். மேலும் 08.05.2025 ம் தேதி காலை 10.15 மணிக்கு 2 வது சாட்சி அனிஷ்நகரில் உள்ள சிவா என்பவரின் வீட்டில் அருகே நின்று கொண்டிருக்கும் போது அந்த வழியாக வந்த எதிரி ஏண்டா நான் போகும் போதும் வரும் போது முறைக்கிறாய் அதே போல் நேற்று கொன்றுவிடுவேன் என்று மிரட்டுகிறாய் என்று கேட்கவும் எதிரியானவர் 2 வது சாட்சியைப் பார்த்து ஏண்டா தேவடியா மகனே என்னடா கேட்குற என்று சட்டையை பிடித்து சண்டை போடவும் சாட்சிகள் சிராஜீதீன், காதர்மைதீன், சஹாபுதின் ஆகியோர் சண்டையை விலக்கவும் எதிரியானவர்

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 10:12:25 +0530

அவர்களுடன் கட்டி உருண்டு விட்டு சென்று எதிரி வீட்டிலிருந்து கத்தியை எடுத்துக்கொண்டு வந்து 2வது சாட்சி ஹபிபுல்லா மற்றும் சாட்சி சீராஜீதீன் ஆகியோரை குத்துவதற்கு ஓடிவரவரும் வாதியான சர்மிளா பானுவும் சாட்சி 2 ஹபிபுல்லா தடுத்த போது எதிரியானவர் அவர் கையில் வைத்திருந்த கத்தியால் வாதியின் வலது கையில் மணிக்கட்டுக்கு மேல் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தியும் பின்பு எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து எப்ப இருந்தாலும் உங்களை ஒவ்வொருவராக கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்தார் என்பதேயாகும். மேற்படி சம்பவத்தை அ.சா.2 ஹபிபுல்லா, சாட்சிகள் சிராசுதீன், காதர் மைதீன், சகாபுதீன் ஆகியோர்கள் பார்த்தார்கள்.

6(2) அ.சா.1 தனது சாட்சியத்தில், கடந்த 08.05.2025 தேதி காலை 10.15 மணியளவில் தானும் ஹபிபுல்லா என்பவரும் சிவா என்பவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அவ்விடத்தில் கூட்டமாக சில நபர்கள் சத்தம்போட்டு கொண்டிருந்தார்கள் என்றும் கூட்டத்தில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ சில நபர் தன்னை கீழே தள்ளியதில் தனக்கு வலது கை மணிகட்டுக்கு மேல் காயம் ஏற்பட்டது என்றும் தான் எழுந்து பார்த்தபோது அங்கு சற்று துாரத்தில் எதிரி இருந்ததால் அவர் தான் தன்னை கீழே தள்ளி காயம் ஏற்படுத்தினார் என்று சந்தேகத்தின் பேரில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க கோரி தொண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் என்றும் புகார் வாக்குமூலத்தில் உள்ள அ.சா.சஆ.1 கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6(3) அ.சா.2 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மனைவியின் தங்கை என்றும் கடந்த 08.05.2025 தேதி காலை 10.15 மணியளவில் தானும் அ.சா.1ம் சிவா என்பவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அவ்விடத்தில் கூட்டமாக சில நபர்கள்

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 10:12:35 +0530

சத்தம்போட்டு கொண்டிருந்தார்கள் என்றும் கூட்டத்தில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ சில நபர் அ.சா.1 யை கீழே தள்ளியதில் அவருக்கு வலதுகை மணிகட்டுக்கு மேல் காயம் ஏற்பட்டது என்றும் அ.சா.1 எழுந்து பார்த்தபோது அங்கு சற்று துாரத்தில் எதிரி இருந்ததால் அவர் தான் தன்னை கீழே தள்ளி காயம் ஏற்படுத்தினார் என்று சந்தேகத்தின் பேரில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க கோரி தொண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக கேள்விபட்டேன் என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என சாட்சியம் அளித்துள்ளார்.

6(4) அ.சா.3 தனது சாட்சியத்தில் தான் தற்போது அனிஷ்நகரில் குடியிருந்து ஓட்டலில் வேலை செய்து வருகிறேன் என்றும் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் சாட்சியம் சொல்ல அழைத்ததின்பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன் என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என சாட்சியம் அளித்துள்ளார்.

6(5) அ.சா.4 தனது சாட்சியத்தில் கடந்த 08.05.2025 ம் தேதி காலை 11.30 மணியளவில் சிறப்பு சார்பு ஆய்வாளர் நாச்சியப்பன் நிலைய பொறுப்பில் இருந்தபோது தொண்டி ஆரம்ப சுகாதார நிலையத்திலிருந்து கிடைக்கபெற்ற தகவலை பெற்று 12.00 மணியளவில் மருத்துவமனை சென்று அங்கு சிகிச்சையில் இருந்த சர்மிளாபானு என்பவர் கொடுத்த அ.சா.ஆ.2 புகார் வாக்குமூலத்தினை பதிவுசெய்து நிலையம் ஆஜராகி புகார் வாக்குமூலம் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.102/25u/s 296(b), 118(1), 351(3) BNS ஆக பதிவுசெய்து அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்.

6(6). பின்னர் வழக்கு கோப்பினை மேல் விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்துள்ளார் என்றும் வழக்குகோப்பினை தனது பார்வைக்கு எடுத்துகொண்ட சார்பு ஆய்வாளர் முருகானந்தம் அதே நாள் 18.30 மணியளவில் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சேக்அப்துல்லா, கலந்தர் சாதிக் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 10:12:46 +0530

பார்வையிட்டு அ.சா.ஆ.4 பார்வைமகசர் மற்றும் அசா.ஆ.5 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார் என்றும் பின்னர் அதே நாள் 14.15 மணியளவில் செல்லம்மாள் என்பவரின் வீட்டின் முன்பு வைத்து சாட்சிகள் சேக்அப்துல்லா, கலந்தர் சாதிக் ஆகியோர் முன்னிலையில் சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தி ஒன்றை அ.சா,.ஆ.6 அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றியுள்ளார்.

6(7).பின்னர் வழக்கின் சாட்சிகளான சர்மிளாபானு, ஹபிபுல்லா, சிராசுதீன், காதர்மைதீன், பார்வைமகசர், அத்தாட்சி சாட்சிகளையும் தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்துள்ளார். அவர்களின் விசாரணையிலும் சாட்சியங்களை விசாரணை செய்ததிலும் சம்பவயிடத்தை பார்வையிட்டதிலிருந்தும் குற்ற சம்பவம் உண்மையென தெரியவந்தது.

6(8).இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரியை தேடி வந்த நிலையில் 08.05.2025 ம் தேதி 15.30 மணியளவில் தொண்டி அனிஷ்நகரில் உள்ள எதிரியின் வீட்டின் அருகே வைத்து எதிரியை கைது செய்வதற்கான தக்க காரணம் கூறி சட்டப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டு கைதுசெய்து தக்க நிலைய பிணையில் விடுவித்துள்ளார். பின்னர் சம்பவயிடத்தில் இருந்த கைப்பற்றப்பட்ட அ.சா.பொ.1 வழக்கு சொத்தினை அ.சா.ஆ.7 படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைப்பு செய்துள்ளார்.

6(9) பின்னர் முதல்தகவல் அறிக்கை பதிவுசெய்த சிறப்பு சார்பு ஆய்வாளரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். வழக்கின் சாட்சிகளான சர்மிளாபானு, ஹபிபுல்லா, சிராசுதீன், காதர்மைதீன், ஆகியோர்களை மீண்டும் விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின்னர் அவர் விசாரணையை முடித்து கொண்டு எதிரி மீது பிரிவுகள் 296(b), 118(1), 351(3) BNS–ன் கீழ் தொண்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அவர்கள் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 10:12:57 +0530

7.அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களில் இருந்து எதிரிக்கு பாதமகமாக உள்ள சங்கதிகள் குறித்து எதிரியிடம் பிரிவு 351(1)(b) BNSS ன் கீழ் படித்துக் காட்டி விளக்கிக்கூறி வினவிய போது எதிரி அரசு தரப்பு சாட்சிகள் சொல்வது பொய்யென்றும், அரசு தரப்பு வழக்கு பொய் வழக்கென்றும் எதிரி தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என தெரிவித்தார். இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது.

8. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் எதிரி மீது 296(b), 118(1), 351(3)(3counts) BNS–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும் ?

**தீர்வு**

9. கடந்த 30.06.2024ம் தேத நம்புதாளையை சேர்ந்த மிருஷான் அலிகான் என்பவரால் முகமது அபுபக்கர் என்பவர் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார். இதில் இறந்த நபரான முகமது அபுபக்கர் என்பவர் இவ்வழக்கின் எதிரி தரப்பினருக்கு உறவினராவார். முகமது அபுபக்கரை கொலை செய்த மிருஷான் அலிகான் என்பவர் இவ்வழக்கின் வாதி தரப்பினருக்கும் உறவினராவார். இதனால் இரு தரப்பினருக்கும் முன்விரோதம் இருந்து வந்த நிலையில் இவ்வழக்கின் வாதி சர்மிளா பானுவின் அக்காவின் கணவரான 2வது சாட்சி ஹபிபுல்லா என்பரிடம் இவ்வழக்கின் எதிரி அடிக்கடி பிரச்சனை செய்து வந்த நிலையில் 07.05.2025ம் தேதி மதியம் 15.30 மணிபோல 2வது சாட்சி ஹபிபுல்லா இருசக்கர வாகனத்தில் வரும்போது எதிரி அவர் ஓட்டி வந்த வண்டியால் முட்டுவது போல் வந்து உன்னை கொன்றுவிடுவேன் என்று மிரட்டிச்சென்றுள்ளார். மேலும் 08.05.2025ம் தேதி காலை 10.15 மணிக்கு 2வது சாட்சி அனிஷ்நகரில் உள்ள சிவா என்பவரின் வீட்டில் அருகே நின்று கொண்டிருக்கும் போது அந்த வழியாக வந்த எதிரி ஏண்டா நான் போகும் போதும் வரும் போது முறைக்கிறாய் அதே போல் நேற்று கொன்றுவிடுவேன் என்று மிரட்டுகிறாய் என்று கேட்கவும் எதிரியானவர் 2வது சாட்சியைப் பார்த்து ஏண்டா தேவடியா மகனே என்னடா

ANTONY RISHAN DEV Digitally signed by ANTONY RISHAN DEV Date: 2026.06.03 10:13:06 +0530

கேட்குற என்று சட்டையை பிடித்து சண்டை போடவும் சாட்சிகள் சிராஜீதீன், காதர்மைதீன், சஹாபுதின் ஆகியோர் சண்டையை விலக்கவும் எதிரியானவர் அவர்களுடன் கட்டி உருண்டு விட்டு சென்று எதிரி வீட்டிலிருந்து கத்தியை எடுத்துக்கொண்டு வந்து 2வது சாட்சி ஹபிபுல்லா மற்றும் சாட்சி சீராஜீதீன் ஆகியோரை குத்துவதற்கு ஓடிவரவரும் வாதியான சர்மிளா பானுவும் சாட்சி 2 ஹபிபுல்லா தடுத்த போது எதிரியானவர் அவர் கையில் வைத்திருந்த கத்தியால் வாதியின் வலது கையில் மணிக்கட்டுக்கு மேல் வெட்டி இரத்தக்காயம் ஏற்படுத்தியும் பின்பு எதிரி கையில் வைத்திருந்த கத்தியை காண்பித்து எப்ப இருந்தாலும் உங்களை ஒவ்வொருவராக கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விடுத்து குற்றம் புரிந்ததாக அரசு தரப்பில் சொல்லப்பட்ட நிலையில், இவ்வழக்கில் புகார்தாரரான அ.சா.1, கடந்த 08.05.2025 தேதி காலை 10.15 மணியளவில் தானும் ஹபிபுல்லா என்பவரும் சிவா என்பவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அவ்விடத்தில் கூட்டமாக சில நபர்கள் சத்தம்போட்டு கொண்டிருந்தார்கள் என்றும் கூட்டத்தில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ சில நபர் தன்னை கீழே தள்ளியதில் தனக்கு வலதுகை மணிகட்டுக்கு மேல் காயம் ஏற்பட்டது என்றும் தான் எழுந்து பார்த்தபோது அங்கு சற்று துாரத்தில் எதிரி இருந்ததால் அவர்தான் தன்னை கீழே தள்ளி காயம் ஏற்படுத்தினார் என்று சந்தேகத்தின் பேரில் எதிரிமீது நடவடிக்கை எடுக்க கோரி தொண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து தன்னுடையது தான் என்றும் அதில் என்ன எழுதியிருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என சாட்சியமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கை முழுமையாக பாதிக்கக்கூடியதாக இருக்கிறது.

10. மேலும் இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட அ.சா. 2 தனது சாட்சியத்தில் அ.சா.1 தனது மனைவியின் தங்கை என்றும்

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 10:13:17 +0530

கடந்த 08.05.2025 தேதி காலை 10.15 மணியளவில் தானும் அ.சா.1ம் சிவா என்பவரின் வீட்டின் முன்பு நின்று கொண்டிருந்தபோது அவ்விடத்தில் கூட்டமாக சில நபர்கள் சத்தம்போட்டு கொண்டிருந்தார்கள் என்றும் கூட்டத்தில் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ சில நபர் அ.சா.1யை கீழே தள்ளியதில் அவருக்கு வலது கை மணிகட்டுக்கு மேல் காயம் ஏற்பட்டது என்றும் அ.சா.1 எழுந்து பார்த்தபோது அங்கு சற்று துாரத்தில் எதிரி இருந்ததால் அவர் தான் தன்னை கீழே தள்ளி காயம் ஏற்படுத்தினார் என்று சந்தேகத்தின்பேரில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க கோரி தொண்டி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் சிகிச்சையில் இருந்தபோது அங்கு வந்த போலிசாரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்ததாக கேள்விபட்டேன் என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்தார்கள் என சாட்சிமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு எவ்வகையிலும் உதவக்கூடியதாக இல்லை.

11. மேலும் இவ்வழக்கில் மற்றொரு கண்ணுற்ற சாட்சி என அரசு தரப்பில் முன்னிலைப் படுத்தப்பட்ட அ.சா. 3 தனது சாட்சியத்தில் தான் தற்போது அனிஷ்நகரில் குடியிருந்து ஓட்டலில் வேலை செய்து வருகிறேன் என்றும் சம்பவம் பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் போலிசார் சாட்சியம் சொல்ல அழைத்ததின்பேரில் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன் என்றும் போலிசார் தன்னை விசாரணை செய்யவில்லை என சாட்சிமளித்து அரசு தரப்பில் பிறழ்சாட்சியாகியிருப்பது அரசு தரப்பு வழக்கிற்கு பாதகமாக அமைந்துள்ளது.

12. மேலும் அ.சா.1 அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் அரசு தரப்பில் பிறழ்சாட்சிகளாகிவிட்ட போதிலும், மாண்புமிகு உச்ச நீதிமன்றம் மற்றும் பல்வேறு மாண்புமிகு உயர்நீதிமன்றங்கள் பிறழ்சாட்சிகளின் சாட்சியங்களில் வழக்கிற்கு உதவக்கூடிய பொருண்மைகள் ஏதேனும் இருந்தால் அதனை கருத்தில் எடுத்துக் கொள்ளலாம் என பல்வேறு தீர்ப்புகளின் மூலம் தெரிவித்துள்ளது, ஆனால் இவ்வழக்கில் பிறழ்சாட்சிகள் ஆகியுள்ள அ.சா.1, அ.சா.2, அ.சா.3 சாட்சியங்களை பரிசீலிக்கும்போது அதில் அரசு

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 10:13:30 +0530

தரப்பிற்கு உதவக்கூடிய வகையில் எந்த சாட்சியமும் அமையாததால் அவை அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் பாதகமாக அமைந்துள்ளது.

13.மேலும் இவ்வழக்கின் புகார்மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சாட்சிகளை விசாரித்து, வாக்குமூலம் பதிவு செய்து, புலன் விசாரணை முடித்து, எதிரி மீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்த விவரம் குறித்து அ.சா.4 சாட்சியம் அளித்துள்ள போதிலும், எதிரியின் குற்றச்செயல்களை இணைக்கக்கூடிய வகையில் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள் ஏதும் அமையாத நிலையில், அரசு தரப்பில் சொல்லப்பட்டது போல மேற்படி குற்றச் சம்பவம் நடைபெற்றதா என எழும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக்கிட இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

14. எனவே, இறுதியாக எதிரி பிரிவுகள் 296(b), 118(1), 351(3) (3counts) BNS–ன் கீழ் குற்றவாளி இல்லை என முடிவு செய்து, மேற்படி பிரிவுகளிலிருந்து எதிரியை பிரிவு 271(1) BNSS ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி எழுதிக் கொடுத்த பிணையமுறி ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

15. இவ்வழக்கில் வழக்கு சொத்தான P.R.No.132/2025 ல் கட்டுப்பட்டுள்ளதும், அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளதுமான 26 செ.மீ நீளத்தில் ஒரு பக்கம் கூர்மையும் 14 செ.மீ மரக்கைப்பிடியும் அதில் 2 செ.மீ இரும்பு பூனுடன் மொத்தம் சுமார் 40 செ.மீ நீளமுள்ள இரும்பு கத்தி ஒன்றை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் உரிய வழிமுறைகளை பின்பற்றி அழித்தல் செய்ய உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்ல அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் நேரடியாக அதை கணினியில் வைத்து சரிபார்க்கப்பட்ட பின்னர் 2026 ம் ஆண்டு ஜீன் மாதம் 03 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 10:13:38 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

அரசு தரப்பு சாட்சிகள் :–

1. அ.சா.1 திருமதி.சர்மிளா பானு
2. அ.சா.2 திரு. ஹபிபுல்லா
3. அ.சா.3 திரு. சகாபுதீன்
4. அ.சா.4 திரு. சௌந்திரபாண்டியன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்)

அரசு தரப்பு சான்றாவணங்கள் :–

| | | | |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 08.05.2025 | புகார்மனுவில் உள்ள அ.சா.1ன் கையெழுத்து |
| 2 | அ.சா.ஆ.2 | 08.05.2025 | புகார்வாக்குமூலம் |
| 3. | அ.சா.ஆ.3 | 08.05.2025 | முதல் தகவல் அறிக்கை |
| 4. | அ.சா.ஆ.4 | 08.05.2025 | பார்வை மகஜர் |
| 5. | அ.சா.ஆ.5 | 08.05.2025 | மாதிரி வரைபடம் |
| 6. | அ.சா.ஆ.6 | 08.05.2025 | அத்தாட்சி |
| 7 | அ.சா.ஆ.7 | 08.05.2025 | படிவம் 91 |

அரசு தரப்பு சான்று பொருட்கள் :–

1. அ.சா.பொ.1 26 செ.மீ நீளத்தில் ஒரு பக்கம் கூர்மையும் 14 செ.மீ மரக்கைப்பிடியும் அதில் 2 செ.மீ இரும்பு பூனுடன் மொத்தம் சுமார் 40 செ.மீ நீளமுள்ள இரும்பு கத்தி ஒன்று

எதிரி தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் சான்று பொருட்கள்:–

––இல்லை––

ANTONY RISHAN DEV
Digitally signed by ANTONY RISHAN DEV
Date: 2026.06.03 10:13:47 +0530

நீதித்துறை நடுவர்,
திருவாடானை.

குறிப்பு :–

1. எந்த ஒரு சாட்சியும் 3 முறைக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
2. வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
3. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.